

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (19.10.2024) கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில், மாவட்டத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு, சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன். நாடாளுமன்ற உறுப்பினர்கள் தே.மலையரசன் (கள்ளக்குறிச்சி), முனைவர்.து.ரவிக்குமார் (விழுப்புரம்), சட்டமன்ற உறுப்பினர்கள் தா.உதயசூரியன் (சங்கராபுரம்), வசந்தம் க.கார்த்திகேயன் (Kஷிவந்தியம்), ஏ.ஜே.மணிக்கண்ணன் (உளுந்தூர்பேட்டை), மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் திருமதி.புவனேஸ்வரி பெருமாள், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை செயலாளர் டாக்டர்.தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், சிறப்பு திட்ட செயலாக்கத் துறை துணை செயலாளர் எம்.பிரதாப், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (19.10.2024) திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.என்.அண்ணாதுரை,, எம்.எஸ்.தரணிவேந்தன், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி அம்பேத்குமார், ஓ.ஜோதி , பெ.சு.தி.சரவணன், மாநகராட்சி மேயர் திருமதி. நிர்மலா வேல்மாறன், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை செயலாளர் தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், சிறப்பு திட்ட செய லாக்கத் துறை துணை செயலாளர் எம்.பிரதாப், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.10.2024) திருவண்ணாமலை புதிய பேருந்து நிலைய கட்டுமான பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த நிகழ்வில் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.என்.அண்ணாதுரை (திருவண்ணாமலை), எம்.எஸ்தரணிவேந்தன் (ஆரணி), சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி(செங்கம்), எஸ்.அம்பேத்குமார் (வந்தவாசி), ஒ.ஜோதி (செய்யார்) பெ.சு.தி.சரவணன் (கலசப்பாக்கம்), மாநகராட்சி மேயர் நிர்மலா வேல்மாறன், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை செயலாளர் டாக்டர்.தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், சிறப்பு திட்ட செயலாக்கத் துறை துணை செயலாளர் எம். பிரதாப், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.10.2024) திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு மாநில ஊரக/ நகர்புற வாழ்வாதார இயக்கம் சார்பில் அமைக்கப்பட்டிருந்த மகளிர் சுய உதவிக் குழுக்களால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் கண்காட்சியினை பார்வையிட்டார். இந்நிகழ்வில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திருவண்ணாமலை மாவட்ட மலைவாழ் மக்கள் பயன்பெற

# சிறப்புக் கவனம் செலுத்தி நலத்திட்ட உதவிகளை வழங்கிடுவீர்!

## அரசு அலுவலர்களுக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வேண்டுகோள்!

திருவண்ணாமலை, அக்.21-

தமிழ்நாடு அரசின் பல்வேறு சிறப்புத் திட்டங்கள் மூலம் திருவண்ணாமலை மாவட்ட மலைவாழ் மக்கள் பயன்பெற அரசு அலுவலர்கள் சிறப்பு கவனம் செலுத்தி நலத்திட்ட உதவிகளை வழங்க வேண்டும் என தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் அனைத்து அரசு துறைகளின் சார்பாக செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்புத் திட்டங்களான முதல்வரின் முகவரி, மக்களுடன் முதல்வர் உள்ளிட்ட திட்டங்களின் கீழ் பட்டா மாற்றம், சான்றிதழ்கள், நிவாரண உதவித்தொகை உள்ளிட்டவை கோரி மக்களிடமிருந்து வரப்பெற்ற மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், புதிய பேருந்து நிலைய கட்டுமானப் பணிகள் உள்ளிட்ட வளர்ச்சித் திட்ட பணிகள், கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் திட்ட பணிகள், குடிநீர் திட்டப்பணிகள், சாலைப்பணிகள் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களின் நிலுவைக்கான காரணம் குறித்து தொடர்புடைய துறை சார்ந்த அலுவலர்களிடம் கேட்டறிந்து, அவற்றின் மீது விரைந்து நடவடிக்கை எடுக்கவும், நிராகரிப்புக்கான காரணம் குறித்தும்கேட்டறிந்துஆய்வுமேற்கொண்டார்.

முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம், நம்மை காக்கும் 48 திட்டம், உள்ளிட்ட திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும், விரிவாக ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தின்போது, பொதுமக்களின் கோரிக்கை மனுக்களின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து திடீராய்வு மேற்கொண்டு, முதலமைச்சரின் முகவரி திட்டத்தின் கீழ் தெரு மின்விளக்கினை சீரமைக்க கோரி மனு அளித்திருந்த புதுப்பாளையம், பசார் கிராமத்தைச் சேர்ந்த இளையபெருமாள் என்பவரை அலைபேசியில் தொடர்பு கொண்டு அவரது கோரிக்கை விவரங்கள் குறித்து கேட்டறிந்ததுடன், சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலரிடம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென அறிவுறுத்தினார். அனைத்து அலுவலர்ளும் தங்களுக்கு வரும் மனுக்கள் மீது உரிய கவனத்துடனும், விரைந்தும் நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் துணை முதல்வர் அவர்கள் தெரிவித்ததாவது:-

பொதுமக்கள் பட்டா கோரி வழங்கும் விண்ணப்பங்களுக்கு முதலமைச்சர் அவர்கள் அதிக முக்கியத்துவம் அளித்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார். சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் மதுரை உள்ளிட்ட சில மாவட்டங்களில் நான் நேரில் சென்று 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பட்டாக்களை வழங்கியுள்ளேன். எனவே பட்டா கேட்டு வரும் மனுக்களுக்கு உரிய ஆய்வு மேற்கொண்டு விரைந்து பட்டா வழங்க அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மலைவாழ் மக்கள் அதிகம் இருக்கும் திருவண்ணாமலை மாவட்டத்தில் அரசின் பல்வேறு திட்டங்கள் மூலம் அவர்கள் பயன்பெற அரசு அலுவலர்கள் சிறப்பு கவனம் செலுத்தி நலத்திட்ட உதவிகளை வழங்க வேண்டும்.

அரசின் சார்பாக செயல்படுத்தப்படும் திட்டங்கள் அனைத்து பொதுமக்களுக்கும் சென்றடையும் வகையில் அரசு துறை அலுவலர்கள் அனைவரும் மிகுந்த ஈடுபாட்டுடன் பணியாற்ற வேண்டும்என்றுதுணைமுதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.என்.அண்ணாதுரை (திருவண்ணாமலை), எம்.எஸ்.தரணிவேந்தன் (ஆரணி), சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி (செங்கம்), எஸ்.அம்பேத்குமார் (வந்தவாசி), ஓ.ஜோதி (செய்யார்), பெ.சு.தி.சரவணன் (கலசப்பாக்கம்). மாநகராட்சி மேயர் திருமதி.நிர்மலா வேல்மாறன், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை செயலாளர் டாக்டர்.தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை துணை செயலாளர் எம்.பிரதாப். உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கிராமப்புறங்களில் வாழும் பொதுமக்களின் பொருளாதாரத்தினை மேம்படுத்திட

# பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார் முதல்வர்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி பேச்சு !



புதுக்கோட்டை, அக். 21 -

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்களை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா தலைமையில் 19.10.2024 அன்று திறந்து வைத்தார்.

பின்னர் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்கிராமப்புறங்களில் வாழும் பொதுமக்களின் பொருளாதாரத்தினை மேம்படுத்திடும் வகையில் பல்வேறு வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், கிராமப்புறங்களில் பல்வேறு கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்கள் இன்றைய தினம் திறந்து வைக்கப்பட்டது.

அதன்படி, பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியத்தில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எம்.உசிலம்பட்டி ஊராட்சி, வடக்கிப்பட்டியில் ரூ.6 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கலையரங்கம் கட்டடத்தையும், ஆலம்பட்டி ஊராட்சி, மொரண்டாம்பட்டியில் ரூ.7 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கலையரங்கம் கட்டடத்தையும், கொன்னையம்பட்டியில் ரூ.6 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கலையரங்கம் கட்டடத்தையும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ், கீழத்தானியம் மற்றும் மறவா மதுரையில் தலா ரூ.39.95 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய ஊராட்சி செயலக கட்டடங்களையும், ஒன்றியப் பொது நிதி திட்டத்தின்கீழ் நெறிஞ்சிக்குடி ஊராட்சி, கூடுதலைப்பட்டியில், ரூ.6 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கலையரங்கம் கட்டடத்தையும், நல்லூர் பெரியநாயகி கோவில் அருகில் ரூ.7 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கலையரங்கம் கட்டடத்தையும், நல்லூரில் ரூ.6 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய பயணியற் நிழற்குடை யினையும், கூடலூர் ஊராட்சி, சித்தூரில் ரூ.13 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய சமுதாய கூடம் கட்டடத்தையும் என மொத்தம் ரூ.130.90 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்களை திறந்து வைத்தார்.

எனவே பொதுமக்கள் அனைவரும் தமிழக அரசின் மூலம் செயல்படுத்தப்படும் இதுபோன்ற மக்கள் நலத் திட்டங்களை உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டு தங்களது வாழ்வாதாரத்தினை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் அ.அக்பர்அலி, பொன்னமராவதி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அ.ஆயிஷா ராணி, எஸ்.ராமச்சந்திரன், பொன்னமராவதி வட்டாட்சியர் எம்.சாந்தா, ஒன்றியக் குழு உறுப்பினர்கள் கோ.பழனியப்பன், வளர்மதி முருகேசன், பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் அ.முத்து, ஊராட்சிமன்றத் தலைவர்கள் சி.பழனிச்சாமி (எம்.உசிலம்பட்டி), த.நல்லையா (கீழத்தானியம்), வை.பழனிச்சாமி (ஆலம்பட்டி), பி.மாரிக்கண்ணு (கொன்னையம்பட்டி), அ.அடைக்கன் (மறவாமதுரை), மு.வைரமாணிக்கம் (நெறிஞ்சிக்குடி), மெ.ராமையா (நல்லூர்), மு.தங்கமணி (கூடலூர்), முருகேசன் (மேலத்தானியம்), உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



திருப்பூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்ற அனைத்துத் துறை அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என். கயல்விழி செல்வராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் எல்.நிர்மல்ராஜ், மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா, மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாநகர துணை காவல் ஆணையர் சுஜாதா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கோ.மலர்விழி மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.





தமிழ்நாடு அரசின் முன்னாள் அமைச்சரும் கழக மூத்த முன்னோடியுமான சுயமரியாதைச்சுடர் மறைந்த மன்னை ப.நாராயணசாமி அவர்களின் 31வது நினைவு நாளை முன்னிட்டு மன்னார்குடி நகரக் கழகம் சார்பில் அமைதி ஊர்வலமும் அன்னாரது நினைவிடத்தில் மலர் அஞ்சலியும் நடைபெற்றது. தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா மன்னை ப.நாராயணசாமி அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற அமைதி ஊர்வலத்தில் தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, மாவட்ட ஊராட்சி பெருந்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, கழக சட்ட திருத்தக் குழு உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஞானசேகரன், அவைத்லைவர் க.தனராஜ், நகரச் செயலாளர் வீரா.கணேசன், நகர் மன்றத் தலைவர் மன்னை த.சோழராஜன், டி.எஸ்.டி.முத்துவேல், சித்தேரி சிவா, நா.கவியரசு, கே.வி.கே.ஆனந்த், வி.எஸ்.ஆர்.தேவதாஸ், பால ஞானவேல், ராஜபூபாலன், காஞ்சித்துரை, கலைவாணி மோகன், கமால் மற்றும் கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பங்கேற்றனர்.